**கவனிக்க.-** *2015.03.27 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1909 - 2015 අප්‍රේල් මස 02 වැනි බ්‍රහස්පතින්දා - 2015.04.02

*1909 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 412 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 414 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2015, ஏப்பிறல் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான ''புதிய சேர்வாளர்கள்'' ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - மொனராகலை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2015, வைகாசி மாதம் 05 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, மார்ச்சு 17.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மொனராகல | கதிர்காமம் | கதிர்காமப் பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், மொனராகலை |

4-110

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி - களுத்துறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2015, வைகாசி மாதம் 05 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, மார்ச்சு 17.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| களுத்துறை | பாணந்துறை | களுத்துறை தெற்குப் பிரதேசத்தின் களுத்துறை மற்றும் பாணந்துறை பிரிவின் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர், மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை |

4-111

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - கேகாலை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2015, வைகாசி மாதம் 05 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, மார்ச்சு 17.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கேகாலை | மாவனல்ல | மாவனல்ல வைத்தியசாலைப் பிரிவில் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், கேகாலை |

4-112

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இளைஞர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சு

சிறுதொழில் முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் (திணைக்களம்சார்) அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடைகாண் பரீட்சை - 2014(2015)

இளைஞர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சின்கீழ் இயங்கிவரும் சிறுதொழில் முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவில் பணி புரியும் உதவிப் பணிப்பாளர் (திணைக்களம்சார்) அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடைகாண் பரீட்சை இவ்வமைச்சின் சார்பில், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2015, யூலை மாதம் கொழும்பில் நடாத்தப்படவுள்ளது. பின்வரும் அறிவித்தலுக்கமைய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **பரீட்சை ஒழுங்கு :**

(அ) இப்பரீட்சை ஒரு வினாத்தாளை உள்ளடக்கியுள்ளது. இவ்வினாத்தாளுக்குரிய பாடத்திட்டம் கீழே தரப்பட்டுள்ளன.

(ஆ) இப்பாடத்துக்கான மொத்தப் புள்ளிகள் 100 ஆக காணப்படுவதுடன் இப்பாடத்தில் சித்தி அடைவதற்கான ஆகக்குறைந்த புள்ளிகள் 40 ஆகும்.

(இ) இப்பரீட்சை சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் இடம்பெறும். விண்ணப்பித்த மொழியினை பின்னர் மாற்றுவதற்கு விண்ணப்பதாரிகளுக்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(ஈ) பரீட்சைக் கட்டணம்.- முதல் தடவையாகப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கான கட்டணத் தினைச் செலுத்த வேண்டியதில்லை. முதல் தடவை அல்லாதவிடத்து 500 ரூபா வீதம் பரீட்சைக் கட்டணம் அறவிடப்படும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் 2003-02-13 என்ற வருமானத் தலைப்பிற்கு தபால்/உப தபால் அலுவலகங்கள் ஏதேனும் ஒன்றில் இப்பரீட்சைக்கான கட்டணத்தினை வரவு வைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் கோடிட்டு ஒதுக்கப்பட்ட இடத்தில் விண்ணப்பதாரியின் பெயரில் பரீட்சைக்காகக் கட்டணம் செலுத்திப் பெறப்பட்ட பற்றுச்சீட்டை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

3. **வினாத்தாளுக்குரிய பாடத்திட்டங்கள்** - (காலம் : 3 மணித்தியாலங்கள்) :

(I) வியாபார முகாமைத்துவமும் அபிவிருத்தியும் (பாடத்திட்ட இலக்கம் - 1) :

(i) தொழில் முயற்சியும் பொருளாதார அபிவிருத்தியும் ;
(ii) வியாபார முகாமைத்துவமும் விற்பனையும், மனித வளம், நிதி மற்றும் வியாபார முகாமைத்துவத்துடன் தொடர்புடைய செயற்பாடுகள் ;
(iii) வியாபாரக் கோட்பாடுகளும் சமூகப் பொறுப்பும் ;
(iv) சாத்தியக்கூற்றுக் கற்கையும் கருத்திட்ட அறிக்கைகள் தயாரித்தலும்.

4. **விண்ணப்பிக்கும் முறை :**

(அ) அனுப்பப்பட வேண்டிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரிப் படிவமானது இவ்வறிவித்தலின் இறுதிப் பகுதியில் குறிப்பிடப் பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள், தமது விண்ணப்பப் படிவங்களை ஏ4 அளவுத் தாளில் இரு பக்கங்களிலும் தயாரித்தல் வேண்டும். விண்ணப்பப்பத்திரத்தில் தலைப்பு 1 தொடக்கம் 3 வரையான விடயங்களைத் தாளின் முதல் பக்கத்திலும், மிகுதியைத் தாளின் 2 ஆம் பக்கத்திலும் உள்ளடங்குமாறு தயாரித்து தமது சொந்தக் கையெழுத்துக் களினால் தெளிவாகப் பூர்த்திசெய்து அனுப்புதல் வேண்டும்.

இங்கு கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத் திற்கமைய தயாரிக்கப்படாத விண்ணப்பப்படிவங்களும், பூரண தகவல்களை வழங்காத விண்ணப்பப்படிவங்களும் எதுவித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவங்களைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பிலுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப் படிவங்களில் சிங்களத்துடன் ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுடன் ஆங்கிலத்திலும் எழுதுதல் வேண்டும்.

(ஆ) முறைப்படி பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பதிவுத்தபால் மூலம் 2015.05.05 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்குமாறு பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும் :

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,
இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்,
ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை,
தபால் பெட்டி இலக்கம் : 1503,
கொழும்பு.

(இ) விண்ணப்பப்படிவத்தை வைத்தனுப்பும் தபாலுறையில் இடதுபக்க மேல் மூலையில் ‘‘உதவிப் பணிப்பாளர் (திணைக்களம்சார்) அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைநிலைப் பரீட்சை - 2014 (2015)’’ என தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படும் இறுதித் தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் எந்தவொரு விண்ணப்பமும் பொறுப்பேற்கப்படமாட்டாது. விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றைத் தம்முடன் வைத்திருத்தல் உசிதமாகும்.

(ஈ) விண்ணப்பங்கள் பெற்றுக்கொண்டமை தொடர்பாக விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்பட மாட்டாது என்பதுடன் விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் விநியோகிக்கப் பட்டதும் உடனடியாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் செய்தித்தாள்கள் மூலம் அறிவிக்கப்படும். அவ்வாறான அறிவித்தல் குறித்து அறிந்துகொள்வதில் விழிப்பாக இருத்தல் வேண்டும். அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 2 அல்லது 3 தினங்களின் பின்னரும் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாவிடின் அறிவித்தலின் பிரகாரம் அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறியத்தருதல் வேண்டும். அவ்வாறு அறியத்தரும் வேளையில் பரீட்சையின் பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம், முகவரி மற்றும் உங்களது முழுப்பெயர் என்பன தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும். பரீட்சை அனுமதி அட்டை தொடர்பாக அறிவுறுத்தல் வழங்கும் விண்ணப்பதாரிகள் கொழும்புக்கு வெளி மாவட்டங்களாயின் அனுமதி அட்டையின் நிழற்படப் பிரதியினை அனுப்புவ தற்காக தங்களது தொலைநகல் (Fax) இலக்கத்தைக் குறிப்பிட்டு இலங்கைப் பரீட்சைகள் ஆணைக்குழுவின் தொலைநகல் இலக்கத்திற்கு தங்களது கோரிக்கைக் கடிதத்தினை அனுப்பிவைக்க வேண்டும். அத்துடன் விசாரணையின் போது, விண்ணப்ப தாரியின் தேவையின் பொருட்டு விண்ணப்பப்படிவம் அனுப்பப்பட்ட பதிவுத் தபாலின் பற்றுச்சீட்டு, பரீட்சைக்கான கட்டணம் செலுத்திய தற்கான பற்றுச்சீட்டு, விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி என்பனவற்றை வைத்துக்கொள்ளுதல் உசிதமாகும்.

5. **பரீட்சைக்குத் தோற்றுதல் :**

(அ) விண்ணப்பங்களை அனுப்பிய அனைத்து விண்ணப்பதாரி களுக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பதாரிகள் தமக்கு வழங்கப்பட்ட பரீட்சை மண்டபங்களில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வையாளருக்கு கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்க வேண்டும். சமர்ப்பிக்க முடியாத பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. பரீட்சார்த்திகள் பின்பற்ற வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும் இவ்வர்த்தமானியின் ஆரம்பத்தில் தரப்பட்டுள்ளது.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவது பரீட்சைக்குத் தோற்றுவதற்கான எல்லாத் தகைமைகளையும் அவர் பெற்றுள்ளார் எனக் கருதுதல் ஆகாது. பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்படும் சட்ட ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் உட்பட்டவர்களாவர். அவ்வாறான சட்ட ஒழுங்கு விதிகளை மீறின் பரீட்சை ஆணையாளரினால் வழங்கப்படும் தண்டனைக்கு உட்பட நேரிடும்.

(ஆ) பரீட்சார்த்திகளின் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தல்.- தான் தோன்றும் அனைத்து விடயங்கள் தொடர்பாக பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடையக்கூடியவாறு எல்லாப் பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தில் தமது ஆள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதன் பொருட்டு பின்வரும் ஆவணங்களில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் பிரயாணக் கடவுச்சீட்டு.

6. இவ்வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையிலான கருத்துகளில் ஏதேனும் கருத்து மாற்றங்கள் காணப்படின், அவ்வேளை சிங்கள மொழியின் கருத்தே மேலோங்கப் படும்.

நிலந்தி சுகததாஸ,
செயலாளர்,
இளைஞர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சு.

இளைஞர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சு,
‘‘நிபுணதா பியச’’,
இல. 354/2, எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு 5,
2015, ஏப்பிறல் 2.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு)

**இளைஞர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் சிறுதொழில் முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் (திணைக்களம்சார்) பதவியினருக்கான முதலாவது வினைத்திறன் தடைகாண் பரீட்சை - 2014 (2015)**

First Efficiency Bar Examination for Assistant Director (Departmental) Officers of the Small Enterprises Development Division of the State Ministry of Youth Affairs - 2014 (2015)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி :
சிங்களம் - 2
தமிழ் - 3
(பொருத்தமான இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்)

1. பெயர் :-

1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(முதலெழுத்துக்களை பெயரின் இறுதியில் குறிப்பிடவும்)
உதாரணம் : GUNAWARDHANA, M. G. B. S. K.

1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
1.3 முழுப்பெயர் (தமிழில்) :----.
1.4 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2. 2.1 அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(இம்முகவரிக்கு அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும்.)

2.2 நிரந்தர முகவரி (தமிழில்) :----.

2.3 பால் :
(பெண்-1, ஆண்-0)
(பொருத்தமான இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்)

3. பரீட்சைக்குத் தோற்றும் பாடங்கள் :

(1) ........................................ விடய இலக்கம்

4. பொருத்தமான இலக்கத்தைக் குறிப்பிடவும் :----.

5. பரீட்சைக் கட்டணம் :
(i) நீங்கள் செலுத்திய கட்டணம், ரூபா :----.
(ii) நீங்கள் கட்டணம் செலுத்திய அலுவலகத்தின் பெயர் :----.
(iii) கட்டணம் செலுத்திய திகதி :----.

நீங்கள் வர்த்தமானி அறிவித்தலில் பந்தி இல. 2 (ஈ) இல் குறிப்பிட்டுள்ளபடி பரீட்சைக்கான கட்டணத்தைச் செலுத்தியிருப்பின் அப்பற்றுச் சீட்டினை இங்கு இணைத்தல் அவசியம். பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை நீங்கள் வைத்திருப்பது உசிதமாகும்.

மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை என உறுதிப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும் சட்ட ஒழுங்கு விதிகளுக்கு கீழ்ப்படிவதாகவும் உறுதியளிக்கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

இவ்விண்ணப்பப்படிவத்தை வழங்கிய திரு./ திருமதி/ செல்வி ........................................................... என்பவர் எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும், அவர் வினைத்திறன் தடைகாண் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியானவர் எனவும் நான் உறுதிப்படுத்துகின்றேன். மேலும் அவர் முதல் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றுகிறார் என்றும் பரீட்சைக் கட்டணங்கள் செலுத்தப் பட்டுள்ளது என்பதுடன் அதன் பற்றுச்சீட்டும் இணைக்கப்பட்டுள்ளது எனவும் நான் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
(அலுவலக முத்திரை).

4-198

---

**இலங்கை கால்நடை உற்பத்தி, சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை – 2014 (2015)**

இலங்கை கால்நடை உற்பத்தி, சுகாதார சேவையில் உள்ள அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை 2015 ஆம் ஆண்டு ஆடி மாத ஆரம்பத்தில் பேராதனையில் நடத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என இத்தால் அறிவிக்கப் படுகின்றது. இதன் பொருட்டு 2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியன்று கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் உள்ள அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. வினைத்திறன்காண் தடைப்பரீட்சைகள் இரண்டிற்கும் ஒரே முறையில் தோற்றக்கூடியதாக நேர அட்டவணைகள் தயாரிக்கப்படும்.

3. **பாடவிதானம்.-** முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சைக்குப் பொருத்தமான பாடத்திட்டம் மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகள் அதன் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன.

வினைத்திறன்காண் பரீட்சைகளின்போது பாடங்களுக்கு தோற்றுகையில் ஒரே அமர்வில் அல்லது அதற்கு மேற்பட்ட அமர்வுகளிலோ தோற்ற முடியும்.

4. இச்சேவையில் உள்ள அலுவலர்கள் I ஆவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்கு தோற்றவேண்டிய பாடங்கள் பின்வருமாறு :

**இலங்கை கால்நடை உற்பத்தி, சுகாதார சேவை**

I ஆவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை

| தொடர் இலக்கம் | விடயம் | பாடப் பரப்பு | நேரம் (மணி) | மொத்த புள்ளிகள் | சித்தியடைவதற்கான ஆகக் குறைந்த புள்ளி |
|---|---|---|---|---|---|
| 1 | நிதி முறைமைகள் | (அ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்க நிதி ஒழுங்கு விதி, நிதிப் பிரமாணம்- (X ஆம் அத்தியாயம் தவிர) | 2 | 100 | 40 |
| 2 | நிர்வாகம் | (அ) அலுவலக முறை, அலுவலக முகாமை மற்றும் அலுவலக ஒழுங்குபடுத்தும் முறைமைகள் தொடர்பான அறிவு | 2 | 100 | 40 |
| | | (ஆ) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதியினூடாக திருத்தம் செய்யப்பட்ட தாபன விதிக் கோவை அத்தியாயம் I-XXII மற்றும் தாபனவிதிக் கோவையின் VI, VII, VIII, IX, XII, XIII, XIV, XV, XVI, XVII, XVIII, XIX, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII, XLVIII அத்தியாயங்கள் | 2 | 100 | 40 |
| 3 | திணைக்களப் பிரமாணம் வினாப் பத்திரம் I | விலங்குச் சட்டம், விலங்கு நோய்ச் சட்டம் மற்றும் திணைக்கள கட்டளை கால்நடை வைத்திய சேவைக்கு பொருத்தமான சுற்றுநிருபங்கள் | 2 | 100 | 40 |
| 4 | திணைக்களப் பிரமாணம் வினாப் பத்திரம் II | (அ) மாதிரிகளை அனுப்புதல், பிரேத பரிசோதனை உள்ளிட்ட நோய் ஆய்வு உறுதி ஆய்வு கூட பரிசோதனை முறைகள், கர்ப்பப் பரிசோதனை உள்ளிட்ட இனங்காணும் பரிசோதனை, | 3 | 100 | 40 |

| தொடர் இலக்கம் | விடயம் | பாடப் பரப்பு | நேரம் (மணி) | மொத்த புள்ளிகள் | சித்தியடைவதற்கான ஆகக் குறைந்த புள்ளி |
|---|---|---|---|---|---|
| | | வெளிக்கள நோய், ஆய்வு உறுதி பரிசோதனை, விலங்குகளுக்கு ஏற்படும் தொற்று நோய்களுக்கு எதிரான தடுப்பு மருந்து, குருதிபாயம் (Sera) ஆகிய முற்காப்பு நடவடிக்கைகள். | | | |
| | | (ஆ) செயற்கை முறைச் சினைப்படுத்தல் செயல் முறையும் தொழில் நுட்பமும், இனப்பெருக்கத்தின் அடிப்படைத் தத்துவங்களும் கன்று வளர்ப்பும் அடை காத்தல், குஞ்சு பொறித்தல், கோழிக் குஞ்சு வளர்ப்பு கால்நடைகளுக்கான போசனை, உணவுப் பண்டம், பசுந்தீவனப் பயிர்ச் செய்கை, வெவ்வேறு பட்ட பயிர்கள் புற் செய்கை, உலர் புல், சைலேஜ் தயாரிப்பு, கால்நடைப் பராமரிப்பு என்பன. | | | |
| | | (இ) பால் உற்பத்தி, கிருமி அழிக்கப்பட்ட பாலை போத்தல்களில் அடைத்து எடுத்துச் செல்லல், பால் சுகாதாரம், பாதுகாப்பு, பால் ஆடை பகுத்தல் உள்ளடங்கலாக பரிசீலனை செய்தல், பால் ஆடை நீக்கல், பட்டர் நெய் மற்றும் தயிர் உற்பத்தி. | | | |
| | | (ஈ) அறுப்பு நிலையம், விலங்கு அறுப்புச் செய்தல் இறைச்சிகளை இனங்காணுதல் உட்பட இறைச்சிகளைப் பரீட்சித்தல். | | | |

5. கீழே தரப்பட்டுள்ள 1966.09.04 ஆந் திகதியுடையதும் 701 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான திறைசேரி சுற்றறிக்கையில் 5 ஆம் பந்தியைக் கவனிக்குமாறு இவ்வினைத்திறன் காண் தடைப் பரீட்சைகளுக்குத் தோற்றும் உத்தியோகத்தர்கள் வேண்டப்படுகின்றனர்.

திணைக்களப் பரீட்சைகளுக்குத் (பதவி உயர்வு மற்றும் வினைத்திறன் காண் தடைப்பரீட்சை உட்பட) தோற்றும் மொழி உத்தியோகத்தர் அரச சேவையில் சேர்வதற்கு தோற்றிய போட்டிப் பரீட்சையின் மொழியிலாகும் அல்லது அரச கரும மொழியிலாகும். போட்டிப் பரீட்சை இல்லாமல் நேரடியாக சேவைக்குச் சேர்ந்தவர்கள் விடயத்தில் பதவி உயர்வுக்கு அல்லது வினைத்திறன் காண் தடைப்பரீட்சைக்கான மொழியாக இருக்கவேண்டியது உத்தியோகத்தர்கள் சேவையில் சேர்ந்துகொள்வதற்கு தகுதிபெற்ற அல்லது அரச கரும மொழியாகும்.

6. இந்தப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பம் செய்த மொழிமூலத்தை பின்னர் மாற்றம் செய்ய இடமளிக்கப்பட மாட்டாது.

7. பரீட்சார்த்தி ஒருவர் தனக்கு உரித்தில்லாத மொழியில் பரீட்சைக்குத் தோற்றியமை பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரது பரீட்சார்த்தத் தன்மை நீக்கப்படும்.

8. விண்ணப்பப்பத்திரங்கள் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய ஏ4 தாளின் இரு பக்கங்களிலும் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் தொடர் இலக்கம் 1 முதல் 8 வரை முதலாம் பக்கத்திலும் மீதி இரண்டாம் பக்கத்திலும் அமையுமாறு தயாரிக்கப்படுதல் வேண்டும். அதற்கு உரிய தகவல்களை தமது சொந்தக் கையெழுத்தினால் மிகவும் தெளிவாக எழுதி நிரப்புதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமையாத விண்ணப்பங்களும் பூரணப்படுத்தாத விண்ணப்பங்களும் அறியத்தராமலேயே நிராகரிக் கப்படும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் நிழற்படப்பிரதி ஒன்றினை வைத்துக்கொள்ளவும் மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய அமைந்துள்ளதா என்பதனை சரிபார்த்துக்கொள்ள வேண்டியதுடன் அவ்வாறு அமையாதவிடத்து நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் தயார்படுத்துகையில் அங்கு தலைப்பிலுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள மொழி மூல விண்ணப் பங்களில் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும், தமிழ் மொழி மூல விண்ணப்பங்களில் அதன் தலைப்பு தமிழிழும் ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

9. இப்பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் அவரால் விதிக்கப்படும் பரீட்சை விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் கட்டுப்பட்டவராவார். இவ்விதிகளும் பிரமாணங் களும் இவ்வர்த்தமானியின் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளன. பரீட்சை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிய வேண்டும். அவ்வொழுங்கு விதிகளை பின்பற்றாதவிடத்து பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தண்டனைக்கு அவர் உட்படுவர்.

10. விண்ணப்பப்படிவங்கள் யாவும் 2015.04.30 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்திற்கு கிடைக்கக்கூடியதாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு திணைக்களத் தலைவரினூடாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். இத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும் :-

கால்நடை உற்பத்தி, சுகாதாரப் பணிப்பாளர் நாயகம்,
கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்,
த. பெ. இல. 13,
கெட்டம்பே, பேராதனை

11. விண்ணப்பதாரருக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடனே அது தொடர்பில் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் ஒன்று பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் சென்றும் அனுமதி அட்டை கிடைக்காதவிடத்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டதற்கு அமைய அது தொடர்பில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறு அறிவிக்கையில் விண்ணப்பகாரரது முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பம் செய்த பரீட்சையின் பெயர் என்பன குறிப்பிடப்படுதல் வேண்டும். கொழும்பிற்கு வெளியே வசிப்பவராயின் மேற்குறிப்பிடப்பட்ட தகவல்களை உள்ளடக்கிய கடிதத்தை தொலைநகலின் ஊடாக பரீட்சை அனுமதிப்பத்திரத்தின் பிரதியை அனுப்பி வைப்பதற்காக விண்ணப்பகாரரின் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி விசாரிப்பது சிறந்ததாகும். அங்கு தேவையான தகவல்களை உறுதிசெய்து கொள்வதன் பொருட்டு விண்ணப்பகாரரினால் தன்வசம் வைத்திருக்கும் விண்ணப்பத்தின் பிரதி பரீட்சை கட்டணம் செலுத்துவதாக இருப்பின் பற்றுச்சீட்டின் பிரதி விண்ணப்பம் பதிவுத்தபாலிட்ட பற்றுச்சீட்டு என்பவற்றை தயார் நிலையில் வைத்திருப்பது சிறந்ததாகும்.

12. மேலே 11 ஆம் பந்தியில் கூறப்பட்டுள்ளவாறான தேவைகளைப் பூர்த்தி செய்யத் தவறும் பரீட்சார்த்திகளால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் எழுத்துமூலமான கடிதத் தொடர்புகள் எதுவும் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

13. இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளின்போது பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை பரீட்சை மண்டப பொறுப்பாளர் உறுதி செய்து கொள்ளும் பொருட்டு ஏற்றுக்கொள்ளப்படுவது ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப் படும் தேசிய ஆளடையாள அட்டை அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட கடவுச்சீட்டு மாத்திரமேயாகும்.

14. இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளிடம் இருந்து பின்வரும் அடிப்படையில் கட்டணங்கள் அறவிடப்படவுள்ளது :-

(அ) முதல் அமர்வு முழுப்பரீட்சை அல்லது ஒரு பகுதி கட்டணம் அறவிடப்படமாட்டாது.

(ஆ) இதன்பின் ஒவ்வொரு அமர்வுக்குமாக-

| | | |
|---|---|---|
| முழுப்பரீட்சை | - ரூபா | 1,000 |
| ஒரு பாடம் | - ரூபா | 500 |

இப்பரீட்சைக்கு இதற்கு முன்னர் விண்ணப்பித்துள்ள அல்லது தற்போதைக்கு அமர்ந்துள்ள விண்ணப்பகாரர் மேலே குறிப்பிடப் பட்டுள்ளவாறு பொருத்தமான கட்டணங்களைச் செலுத்துமாறு வேண்டப்படுகின்றார்கள். இப்பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு செலவு வைக்குமாறு தீவில் அமையப்பெற்றுள்ள எந்தவொரு தபால் அல்லது உப தபால் அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பத்தில் உரிய கூட்டில் கழறாதவாறு ஒட்டவும். மேலும் அதன் நிழற்படப் பிரதியை வைத்திருப்பதானது பயன் மிக்கதாகும்.

15. விண்ணப்பக்காரர் ஒருவருக்கு அனுமதி அட்டை ஒன்று வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்குத் தோற்ற தகைமைகளைக் கொண்டுள்ளார் எனக் கருதப்படலாகாது.

16. இங்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் வெளியிடப்படும் அறிவித்தல்களுக்கிடையே ஏதாவது பொருந்தாத் தன்மை அல்லது வேறுபாடு காணப்படுமேயாயின், அவ்வேளையில் சிங்கள மொழிமூல அறிவித்தலே ஏற்புடையதாக அமையும்.

செயலாளர்,
சமூக சேவைகள், நலன்புரி மற்றும்
கால்நடை வள அபிவிருத்தி அமைச்சு.

சமூக சேவைகள், நலன்புரி மற்றும்
கால்நடை வள அபிவிருத்தி அமைச்சு,
இல. 45, புனித மைக்கல் வீதி,
கொழும்பு 03,
2015, மாச்சு 16.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பரீட்சைத் திணைக்களம் - இலங்கை**

*இலங்கை கால்நடை உற்பத்தி, சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை – 2014/2015*

First Efficiency Bar Examination for the Officers in Sri Lanka Animal Production and Health Service - 2014/2015

(கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.)

உத்தியோகத்தர் பரீட்சைக்கு தோற்றும் மொழிமூலம் :-
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

1. (அ) முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.
(உதாரணம் GUNAWARDHANA, M. G. B. S. K)

(ஆ) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2. தபால் முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(அனுமதி அட்டை அனுப்பப்படுவதற்காக)

3. பால் :
பெண் - 1
ஆண் - 0
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

5. அறிவித்தலின் நான்காவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பாட எண்களுடன் தோற்றும் பாடங்கள் (தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டும்) :-

(i) பாட எண் ☐☐ பாடம் ..............
(ii) பாட எண் ☐☐ பாடம் ..............
(iii) பாட எண் ☐☐ பாடம் ..............
(iv) பாட எண் ☐☐ பாடம் ..............

6. இதற்கு முன்னர் முழுதாக அல்லது பகுதியாக இப்பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ளீரா அல்லது தோற்றியுள்ளீரா என்பதைக் குறிப்பிடுக. அவ்வாறு தோற்றியிருப்பின் பாடங்களையும் ஆண்டையும் மாதத்தையும் தருக :----.

7. பிறந்த திகதி :

வருடம் ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

8. பதவிப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
திணைக்களத்தின் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

9. இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவைக்கு நியமனம் பெற்ற திகதி :----.

10. செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் : ரூபா ----.
பணம் செலுத்தப்பட்ட பணிமனை :----.
பற்றுச்சீட்டு இலக்கம் :----.

| பற்றுச்சீட்டினை ஒட்டுவதற்காக<br>(பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியை வைத்துக்கொள்ளவும்) |
|---|

மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் சரியானது எனவும் விண்ணப்பத்தில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலத்தில் இப்பரீட்சையை எழுதுவதற்கு உரிமை உள்ளது எனவும், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் பரீட்சை ஒழுங்கு விதிகளுக்கு கட்டுப்படுவேன் எனவும் இத்தால் உறுதி மொழிகின்றேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகத்தின் ஊடாக பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்குச் சமர்ப்பித்தல் :**

இதனகத்துக் காணப்படும் விபரங்களையுடைய பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற தகைமையுடையவரென்றும், குறிப்பிடப்பட்ட மொழி மூலத்தில் இப்பரீட்சையில் தோற்றுவதற்கு இவ்விண்ணப்பதாரிக்கு தகைமையுள்ளது எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

*விண்ணப்பதாரர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை ஒட்டி உள்ளார் என அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

பரீட்சார்த்தியினால் கையொப்பம் இடப்பட்டது எனவும் சான்றுப்படுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்.

பதவிப்பெயரும்.
திகதி :----.
(*கட்டணம் செலுத்தாதவிடத்து வெட்டிவிடவும்)

4-199/1

---

**இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை – 2014/2015**

இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் உள்ள அலுவலர்களுக்கான II ஆவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை 2015 ஆம் ஆண்டு ஆடி மாத ஆரம்பத்தில் பேராதனையில் நடத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இதன் பொருட்டு 2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியன்று

கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் உள்ள அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. வினைத்திறன்காண் தடைப்பரீட்சைகள் இரண்டிற்கும் ஒரே முறையில் தோற்றக்கூடியதாக நேர அட்டவணைகள் தயாரிக்கப்படும்.

3. **பாடவிதானம்**.- இரண்டாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சைக்குப் பொருத்தமான பாடத்திட்டம் மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகள் அதன் புதிய சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப் பட்டுள்ளன. இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் உள்ள அலுவலர்களுக்கான II ஆவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சைக் கான பாடத்திட்டம் இணைப்பு 'அ' வில் குறிப்பிடப்பட்டுள்ளன.

வினைத்திறன்காண் பரீட்சைகளின்போது பாடங்களுக்கு தோற்று கையில் ஒரே அமர்விலோ அல்லது அதற்கு மேற்பட்ட அமர்வுகளிலோ தோற்ற முடியும்.

4. இச்சேவையில் உள்ள அலுவலர்கள் II ஆவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்கு தோற்றவேண்டிய பாடங்கள் பின்வருமாறு :

**இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவை**

II ஆவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை

| தொடர் இல. | விடயம் | நேரம் (மணி) | மொத்த புள்ளிகள் | சித்தியடைவதற்கான ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 1 ஆம் பகுதி | 3 | 100 | 40 |
| 2 | 2 ஆம் பகுதி | 3 | 100 | 40 |
| 3 | 3 ஆம் பகுதி வினாப்பத்திரம் I | 3 | 100 | 40 |
| 4 | 3 ஆம் பகுதி வினாப்பத்திரம் II | 3 | 100 | 40 |
| 5 | 3 ஆம் பகுதி வினாப்பத்திரம் III | 3 | 100 | 40 |
| 6 | 3 ஆம் பகுதி வினாப்பத்திரம் IV | 3 | 100 | 40 |
| 7 | 3 ஆம் பகுதி வினாப்பத்திரம் V | 3 | 100 | 40 |
| 8 | 3 ஆம் பகுதி வினாப்பத்திரம் VI | 3 | 100 | 40 |
| 9 | 3 ஆம் பகுதி வினாப்பத்திரம் VII | 3 | 100 | 40 |
| 10 | 3 ஆம் பகுதி வினாப்பத்திரம் VIII | 3 | 100 | 40 |
| 11 | 3 ஆம் பகுதி வினாப்பத்திரம் IX | 3 | 100 | 40 |
| 12 | 3 ஆம் பகுதி வினாப்பத்திரம் X | 3 | 100 | 40 |
| 13 | 3 ஆம் பகுதி வினாப்பத்திரம் XI | 3 | 100 | 40 |

**குறிப்பு**.- இரண்டாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை விண்ணப்பதாரிகள் அமரவேண்டியது பகுதி 1 அல்லது பகுதி 2 வினாப்பத்திரம் இரண்டில் ஒன்றுக்கும் மற்றும் 3 ஆம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள 11 வினாப்பத்திரங்களில் இருந்து இரு வினாப் பத்திரங்களுக்கு மட்டும் அமரல் வேண்டும். சித்தி எய்துவதன் பொருட்டு ஆகக்குறைந்தது 40% புள்ளிகளை ஒவ்வொரு வினாப் பத்திரத்திலும் பெறுதல் வேண்டும்.

5. கீழே தரப்பட்டுள்ள 1966.09.04 ஆந் திகதியுடையதும் 701 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான திறைசேரி சுற்றறிக்கையில் 5 ஆம் பந்தியைக் கவனிக்குமாறு இவ்வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகளுக்குத் தோற்றும் உத்தியோகத்தர்கள் வேண்டப்படுகின்றனர்.

திணைக்களப் பரீட்சைக்குத் (பதவி உயர்வு மற்றும் வினைத்திறன் காண் தடைப்பரீட்சை உட்பட) தோற்றும் மொழி உத்தியோகத்தர் அரச சேவையில் சேர்வதற்கு தோற்றிய போட்டிப் பரீட்சையின் மொழியிலாகும் அல்லது அரச கரும மொழியிலாகும். போட்டிப் பரீட்சை இல்லாமல் நேரடியாக சேவைக்குச் சேர்ந்தவர்கள் விடயத்தில் பதவி உயர்வுக்கு அல்லது வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்கான மொழியாக இருக்கவேண்டியது உத்தியோகத்தர்கள் சேவையில் சேர்ந்து கொள்வ தற்கு தகுதிபெற்ற அல்லது அரச கரும மொழியாகும்.

6. இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பம் செய்த மொழிமூலத்தை பின்னர் மாற்றம் செய்ய இடமளிக்கப்பட மாட்டாது.

7. பரீட்சார்த்தி ஒருவர் தனக்கு உரித்தில்லாத மொழியில் பரீட்சைக்கு தோற்றியமை பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரது பரீட்சார்த்தத் தன்மை நீக்கப்படும்.

8. விண்ணப்பப்பத்திரங்கள் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய ஏ4 தாளின் இரு பக்கங்களிலும் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் தொடர் இலக்கம் 1 முதல் 8 வரை முதலாம் பக்கத்திலும் மீதி இரண்டாம் பக்கத்தில் அமையுமாறும் தயாரிக்கப்படுதல் வேண்டும். அதற்கு உரிய தகவல்களை தமது சொந்தக் கையெழுத்தினால் மிகவும் தெளிவாக எழுதி நிரப்புதல் வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் ஒளிப்பிரதி ஒன்றினை வைத்துக்கொள்ளவும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பத்திற்கு அமைய அமைந்துள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ள வேண்டியதுடன் மாதிரி விண்ணப்பத்திற்கு அமைய, அமையாத மற்றும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் அறியத்தராமலேயே நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் தயார்படுத்துகையில் அங்கு தலைப்பிலுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பங்களில் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பங்களில் அதன் தலைப்பு தமிழிலும் ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

9. இப்பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் அவரால் விதிக்கப்படும் பரீட்சை விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் கட்டுப்பட்டவராவார். இவ்விதிகளும் பிரமாணங் களும் இவ்வர்த்தமானியின் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளன. பரீட்சை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிய வேண்டும். அவ்வொழுங்கு விதிகளை பின்பற்றாதவிடத்து பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தண்டனைக்கு அவர் உட்படுவர்.

10. விண்ணப்பப்படிவங்கள் யாவும் 2015.04.30 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்திற்கு கிடைக்கக்கூடியதாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு திணைக்களத் தலைவரினூடாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

இத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும் :-

கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகம்,
கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்,
த. பெ. இல. 13,
கெட்டம்பே, பேராதனை

11. உரியவாறு பரீட்சைக்கு விண்ணப்பம் அனுப்பி வைத்த விண்ணப்பதாரருக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும். அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடனே அது தொடர்பில் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் ஒன்று பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் சென்றும் அனுமதி அட்டைகள் கிடைக்காதவிடத்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டதற்கு அமைய அது தொடர்பில் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறியக்கொடுத்தல் வேண்டும். அவ்வாறு அறிவிக்கையில் விண்ணப்ப தாரரது முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பம் செய்த பரீட்சையின் பெயர் என்பன குறிப்பிடப்படுதல் வேண்டும். கொழும்பிற்கு வெளியே வசிப்பவராயின் மேற்குறிப்பிடப்பட்ட தகவல்களை உள்ளடக்கிய கடிதத்தை தொலை நகலின் ஊடாக பரீட்சை அனுமதிப்பத்திரத்தின் பிரதியை அனுப்பி வைப்பதற்காக விண்ணப்பதாரரின் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி விசாரிப்பது சிறந்ததாகும். அங்கு தேவையான தகவல்களை உறுதி செய்து கொள்வதன் பொருட்டு விண்ணப்ப தாரரினால் தன்வசம் வைத்திருக்கும் விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதி பரீட்சைக் கட்டணம் செலுத்துவதற்காக இருப்பின் பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதி விண்ணப்பம், பதிவுத் தபாலிட்ட பற்றுச்சீட்டு என்பவற்றை தயார் நிலையில் வைத்து இருப்பது சிறந்ததாகும்.

12. மேலே 11 ஆம் பந்தியில் கூறப்பட்டுள்ளவாறான தேவைகளைப் பூர்த்தி செய்யத் தவறும் பரீட்சார்த்திகளால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் எழுத்துமூலமான கடிதத் தொடர்புகள் எதுவும் கவனத்திற்கொள்ளப் படமாட்டாது.

13. இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளின்போது பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை பரீட்சை மண்டப பொறுப்பாளர் உறுதி செய்து கொள்ளும் பொருட்டு ஏற்றுக்கொள்ளப்படுவது ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் தேசிய ஆளடையாள அட்டை அல்லது ஏற்றுக்கொள்ளப் பட்ட கடவுச்சீட்டு மாத்திரமேயாகும்.

14. இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளிடம் இருந்து பின்வரும் அடிப்படையில் கட்டணங்கள் அறவிடப்படவுள்ளது :-

(அ) முதல் அமர்வு முழுப்பரீட்சை அல்லது ஒரு பகுதி கட்டணம் அறவிடப்படமாட்டாது.

(ஆ) இதன்பின் ஒவ்வொரு அமர்வுக்குமாக-

| | |
|---|---|
| முழுப்பரீட்சை | - 1,000.00 ரூபா |
| ஒரு பாடம் | - 500.00 ரூபா |

இப்பரீட்சைக்கு ஏற்கனவே தோற்றியுள்ள அல்லது இதற்கு முன்னர் விண்ணப்பம் செய்துள்ள பரீட்சார்த்திகள் மேலே குறிப்பிடப்பட் டுள்ளவாறு பொருத்தமான கட்டணங்களைச் செலுத்துமாறு வேண்டப்படுகின்றார்கள். இப்பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு செலவு வைக்குமாறு தீவில் அமையப்பெற்றுள்ள எந்தவொரு தபால் அலுவலகத்திலோ அல்லது உப தபால் அலுவலகத்திலோ செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பத்தில் உரிய கூட்டில் கழறாதவாறு ஒட்டவும். மேலும் அதன் நிழற்படப் பிரதியை வைத்திருப்ப தானது பயன்மிக்கதாகும்.

15. விண்ணப்பக்காரர் ஒருவருக்கு அனுமதி அட்டை ஒன்று வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்குத் தோற்ற தகைமைகளைக் கொண்டுள்ளார் எனக் கருதப்படலாகாது.

16. இங்கு சிங்களம். தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் வெளியிடப்படும் அறிவித்தல்களுக்கிடையே ஏதாவது பொருந்தாத தன்மை அல்லது வேறுபாடு காணப்படுமாயின், அவ்வேளையில் சிங்கள மொழிமூல அறிவித்தலே ஏற்புடையதாக அமையும்.

செயலாளர்,
சமூக சேவைகள், நலன்புரி மற்றும்
கால்நடை வள அபிவிருத்தி அமைச்சு.

சமூக சேவைகள், நலன்புரி மற்றும்
கால்நடை வள அபிவிருத்தி அமைச்சு,
இல. 45, புனித மைக்கல் வீதி,
கொழும்பு 03,
2015, மாச்சு 16.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பரீட்சைத் திணைக்களம் - இலங்கை**

இலங்கை கால்நடை உற்பத்தி ,சுகாதார சேவை
உத்தியோகத்தர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண்
தடைப்பரீட்சை – 2014/2015

Second Efficiency Bar Examination for the Officers in Sri Lanka Animal Production and Health Service - 2014/2015

(கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.)

உத்தியோகத்தர் பரீட்சைக்கு தோற்றும் மொழிமூலம் :-
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

☐

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

1. (அ) முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு முதலெழுத்துக் களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----. (உதாரணம் GUNAWARDHANA, M. G. B. S. K)

(ஆ) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2. தபால் முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(அனுமதி அட்டை அனுப்பப்படுவதற்காக)

3. பால் :
பெண் - 1
ஆண் - 0

☐

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

5. அறிவித்தலின் நான்காவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பாட எண்களுடன் தோற்றும் பாடங்கள் (தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டும்) :-

(i) பாட எண் [ ] [ ] பாடம் ..............
(ii) பாட எண் [ ] [ ] பாடம் ..............
(iii) பாட எண் [ ] [ ] பாடம் ..............
(iv) பாட எண் [ ] [ ] பாடம் ..............
(v) பாட எண் [ ] [ ] பாடம் ..............

6. இதற்கு முன்னர் முழுதாக அல்லது பகுதியாக இப்பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ளீரா அல்லது தோற்றியுள்ளீரா என்பதைக் குறிப்பிடுக. அவ்வாறு தோற்றியிருப்பின் பாடங்களையும் ஆண்டையும் மாதத்தையும் தருக :----.

7. பிறந்த திகதி :

வருடம் [ ] [ ] [ ] [ ] மாதம் [ ] [ ] திகதி [ ] [ ]

8. பதவிப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
திணைக்களத்தின் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

9. இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவைக்கு நியமனம் பெற்ற திகதி :----.

10. செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் : ரூபா ----.
பணம் செலுத்தப்பட்ட பணிமனை :----.
பற்றுச்சீட்டு இலக்கம் :----.

| பற்றுச்சீட்டினை ஒட்டுவதற்காக<br>(பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியை வைத்துக்கொள்ளவும்) |
|---|

மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் சரியானது எனவும் விண்ணப்பத்தில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலத்தில் இப்பரீட்சையை எழுதுவதற்கு உரிமை உள்ளது எனவும், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் பரீட்சை ஒழுங்கு விதிகளுக்கு கட்டுப்படுவேன் எனவும் இத்தால் உறுதி மொழிகின்றேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகத்தின் ஊடாக பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்குச் சமர்ப்பித்தல் :**

இதனகத்துக் காணப்படும் விபரங்களையுடைய பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற தகைமையுடையவரென்றும், குறிப்பிடப்பட்ட மொழி மூலத்தில் இப்பரீட்சையில் தோற்றுவதற்கு இவ்விண்ணப்பதாரிக்கு தகைமையுள்ளது எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

*விண்ணப்பதாரர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை ஒட்டி உள்ளார் என அத்தாட்சிப் படுத்துகின்றேன்.

பரீட்சார்த்தியினால் கையொப்பம் இடப்பட்டது எனவும் சான்றுப் படுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்.

பதவிப்பெயரும்.
திகதி :----.
(*கட்டணம் செலுத்தாதவிடத்து வெட்டிவிடவும்)

***பின்னிணைப்பு "அ"***

இலங்கை கால்நடைவள உற்பத்தி, சுகாதார சேவையில் உள்ள அலுவலர்களுக்கான இரண்டாம் வினைத்திறன் காண் தடைப் பரீட்சையின் போது பின்வரும் பாடங்களில் சித்தியடைதல் வேண்டும் :-

பகுதி I – பின்வரும் பிரிவுகளில் இதற்கான பாடத்திட்டம் சேர்க்கப்பட்டிருக்கும் :-

*2.1, 2.2, 4.1, 4.2, 5.2, 5.8, 6.5, 7.2.1, 8.2, 8.2.2, 8.2.3, 8.3.1, 9.2, 9.4, 9.6, 9.7* பகுதிகளில் உள்ளடக்கப்பட்டிருக்கும். இதற்குரிய விபரமான பாடத்திட்டம் பேராதனை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத் திடமும் மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

பகுதி II – பின்வரும் பிரிவுகளில் இதற்கான பாடத்திட்டம் சேர்க்கப்பட்டிருக்கும் :-

*1.1.1, 1.1.4, 1.2.1, 3.2, 3.1.1, 3.1.2, 3.2.1, 10.1.1, 10.1.2, 10.1.3, 10.1.4, 10.1.6, 10.2.1, 10.2.8, 10.4.1* பகுதிகளில் உள்ளடக்கப்பட்டிருக்கும். இதற்குரிய விபரமான பாடத்திட்டம் பேராதனை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திடமும் மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

பகுதி III –

வினாத்தாள் I - தொற்றுநோயியல்
வினாத்தாள் II - கால்நடைப் பொருளியல்
வினாத்தாள் III - மிருக வைத்திய பொதுச் சுகாதாரம்
வினாத்தாள் IV - விவசாய விஸ்தரிப்பு
வினாத்தாள் V - பரம்பரையியலும் சினைப்படுத்தலும்
வினாத்தாள் VI - விலங்கு உடற்றொழிலியலும் இனப்பெருக்கமும்
வினாத்தாள் VII - வீடமைப்பு முகாமைத்துவம்
வினாத்தாள் VIII - விலங்குப் போசணை
வினாத்தாள் IX - பசும்புல் மற்றும் விலங்கு தீவனப் பயிர்
வினாத்தாள் X - பிரயோக மிருகவியல் நுண்ணுயிரியலும் நீர்ப்பீடணவியலும்
வினாத்தாள் XI - பிரயோக மருத்துவம், நோயியல் மற்றும் ஒட்டுண்ணியியல்

**குறிப்பு**.- பரீட்சார்த்திகள் சித்திபெறுவதற்கு மொத்தப் புள்ளிகளில் 40 சதவீதத்தைப் பெறுதல் வேண்டும்.

இதற்குரிய விபரமான பாடத்திட்டம் பேராதனை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திடமும் மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர்களிடமும் பெற்றுக் கொள்ளலாம்.

4-199/2

---

## சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

மாணவ தாதியர் பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு - 2015

சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சின்கீழ் மாணவ தாதியர் பயிற்சியின் பொருட்டு ஆட்சேர்த்துக்கொள்வதற்கு 1837/8 ஆம் இலக்க 2013.11.19 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை தாதிமார் சேவை பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமை களைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (தாதியர் சேவை பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய இந்த அமைச்சின்கீழ் நிருவகிக்கப்படும் வைத்தியசாலைகளின் தேவை கருதி ஆண் விண்ணப்பதாரிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்).

1. இங்கு சேர்த்துக்கொள்ளப்படும் எண்ணிக்கை கருத்திற்கொள்ளப் படுகின்ற ஒவ்வொரு வருடத்தினதும் விண்ணப்ப எண்ணிக்கையின் விகித சம அடிப்படையில் பிரிக்கப்படும். அதன் பின்னர் ஒவ்வொரு வருடத்திற்காகவும் சேர்த்துக்கொள்ளப்படவுள்ள அளவினை அவ்வாண்டின் ஏற்புடைய உயிரியல்/ கணிதம் மற்றும் விவசாய விஞ்ஞான விடயத் துறைகளில் விண்ணப்பித்த மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப விகிதாசார அடிப்படையில் பிரித்து அதன் பின்னர் உயர் Z பெறுமானத்தைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் மத்தியில் இருந்து மாவட்ட அடிப்படையில் தகுதியுடையோர் தெரிவுசெய்யப்படுவர்.

2. இப்பாடநெறி முழுநேரப் பாடநெறியாகும். ஐந்து வார நாட்கள் மற்றும் சனிக்கிழமை முற்பகலில், பல்கலைக்கழகத்தில் அல்லது சுகாதார அமைச்சின்கீழ் அல்லது வேறு அரச நிறுவனத்தில் அல்லது வேறு நிறுவனங்களில் முழுநேர பாடநெறிகளில் பயிலும் மாணவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியாது. யாரொருவர் அவ்வாறு விண்ணப் பித்து பிறிதொரு சந்தர்ப்பத்தில் தெரியவருமிடத்து அவரை பாடநெறியை/ பதவியை விட்டு விலக்குவதுடன் அதுவரை அரசினால் அவருக்காக செலவிடப்பட்ட சகல கொடுப்பனவுகளும் அறவிடப்படும். பல்கலைக் கழகத்திலோ அல்லது வேறு அரச நிறுவனங்களிலோ முழுநேர பாடநெறிகளில் பயிலுகின்ற ஒருவர் இதற்கு விண்ணப்பிக்க விரும்பினால் அவர்கள் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் :-

2.1 2015.04.24 ஆந் திகதி ஆகும்போது நீங்கள் எந்தவொரு பல்கலைக்கழகத்திலோ அல்லது வேறு அரச நிறுவனத் திலோ முழுநேரப் பாடநெறிக்காக பதிவுசெய்திருப்பின் மாணவ தாதி பயிற்சி நெறிக்காக தெரிவுசெய்யப்படுமிடத்து தாதிப் பயிற்சிக்காக தாதிக் கல்லூரிகளில் பதிவுசெய்யும் தினத்திற்கு முன்னர் குறித்த பயிற்சியின் அல்லது பாடநெறியின் பதிவை இரத்துச்செய்துகொள்ள வேண்டும்.

2.2 2015.04.24 ஆந் திகதியன்று நீங்கள் பல்கலைக்கழகத்திலோ அல்லது சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய அமைச்சின்கீழ் நடாத்தப்படுகின்ற பாடநெறிகளிலோ பதிவுசெய்யாதவராக இருப்பினும் தாதிப் பயிற்சிக்கு பயிலுநர்கள் பதிவுசெய்யும் தினமாகும்போது பதிவுசெய்திருப்பின், அவர்களும் மாணவ தாதிப் பயிற்சியில் பதிவுசெய்துகொள்ள முன் அப்பாட நெறியின் பதிவினை இரத்துச்செய்து கொள்ள வேண்டும்.

2.3 சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய அமைச்சின்கீழ் முழுநேரப் பயிற்சிப் பாடநெறிகளில் பதிவுசெய்யப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளாயின், அவர்கள் மாணவ தாதிப் பயிற்சிக்குத் தெரிவுசெய்யப்படுமிடத்து அதுவரை பெற்றுக் கொண்டு இருந்த பயிற்சி தொடர்பாக கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தத்திற்கு அமைய ஒப்பந்தத் தொகையையும் மற்றும் அதுவரை பெற்றுக்கொண்ட ஏனைய கொடுப்பனவுகளையும் செலுத்தி குறித்த பயிற்சியை விட்டு விலகினால் மாத்திரமே மாணவ தாதிப் பயிற்சிக்காக பதிவுசெய்யப்படுவர்.

**கவனத்திற் கொள்க :**

(1) மேற்படி 2.1 தொடக்கம் 2.3 வரையாக குறிப்பிடப் பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்திசெய்திருப்பினும் நீங்கள் போதுமானளவு Z பெறுமானத்தைப் பெறாதவிடத்து அல்லது இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய நிபந்தனைகளைப் பூர்த்திசெய்திராவிடின், எவ்விதத்திலும் இப்பயிற்சிக்காக தகைமை பெறாதவர் ஆவீர் என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

(2) அவ்வாறே, நீங்கள் போதுமானளவு Z பெறுமானத்தைப் பெற்று இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய சகல நிபந்தனைகளைப் பூர்த்திசெய்திருப்பினும் 2.1 தொடக்கம் 2.3 வரை குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய நிபந்தனைகளைப் பூர்த்திசெய்யாதவிடத்து, எவ்விதத் திலும் இப்பயிற்சிக்காக பதிவுசெய்யப்படமாட்டாது.

**3. கல்வித் தகைமைகள்**.- (அ) 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் ஏதாவது ஓர் ஆண்டில் க. பொ. த (உ. த.) பரீட்சைக்கு தோற்றி ஒரே அமர்வில் விஞ்ஞான பிரிவில் உயிரியல்/கணிதம் மற்றும் விவசாய விஞ்ஞானம் ஆகிய துறைகளில் ஏதாவது ஒரு துறையில் அனைத்துப் பாடங்களிலும் (பொதுப்பரீட்சை தவிர்ந்த) தேர்ச்சியடைந் திருத்தல்.

அத்துடன்

(ஆ) க. பொ. த. (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்கள மொழி/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**4. ஏனைய தகைமைகள்**.- (அ)இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.

(ஆ) 2015.04.24 ஆந் திகதியில் 18 வயதிற்குக் குறையாமலும் 28 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

(இ) உயரம் : 4 அடி 10 அங்குலத்திற்கு (147.3 cm) குறையாதிருத்தல்.

(ஈ) திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும்.

(உ) நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றக்கூடிய உடற்தகைமை களை எல்லா வகையிலும் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஊ) தான் விண்ணப்பிக்கும் மாவட்டத்திற்குள் விண்ணப்ப முடிவுத் திகதியான 2015.04.24 ஆந் திகதிக்கு கிட்டிய முன்னைய (3) வருடங்கள் தொடராக வசித்து இருக்க வேண்டும். தனது வதிவை உறுதிப்படுத்துவ தற்காக கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள ஒரு தேவைப்பாடு பூர்த்திசெய்யப்பட வேண்டியதுடன் குறித்த ஆவணங்கள் நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிக்கப்பட வேண்டும் :

(1) 2015.04.24 ஆந் திகதிக்கு கிட்டிய முன்னைய 5 வருடங் களுக்குள் அவர் அம்மாவட்டத்தில் 3 வருடங்களாவது தொடர்ச்சியாக வசித்து இருக்க வேண்டும். இங்கு பிரதேச செயலாளரது மேலொப்பத்துடன் கிராம அலுவலரின் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(2) தொடர்ச்சியாக 5 வருடங்கள் அம்மாவட்டத்தில் இரண்டாம் நிலைக் கல்வியைப் பெற்றிருக்க வேண்டும். இதற்காக பாடசாலை விலகு சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(3) விண்ணப்பதாரி குறித்த மாவட்டத்தில் பிறந்தவராக இருத்தல் வேண்டும். பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(4) மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தில் இருந்து கிட்டிய முன்னைய 3 வருடங்களுக்குரிய வாக்காளர் பெயர்ப் பட்டியலின் பிரதி சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**குறிப்பு**.- விண்ணப்பதாரியின் தந்தை அல்லது தாய் அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் அல்லது கூட்டுத்தாப னங்களில் இடமாற்றக்கூடிய சேவையில் ஈடுபட்டு இருப்பின் அவ்விண்ணப்பதாரிக்கு தமது தாயினதோ அல்லது தந்தையினதோ பிறந்த மாவட்டத்தினைத் தனது மாவட்டமாகத் தெரிவுசெய்ய முடியும். (தந்தையினது/ தாயினது பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தினையும் அவர்களது தொழில் நிலையை உறுதிப்படுத்தும் ஆவணங்களையும் சமர்ப்பித்தல் வேண்டும்).

5. **விண்ணப்பிக்க வேண்டிய முறை**.- (அ) இவ்வறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப ஏ4 தாளில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பப் படிவத்தினைத் தயாரித்துக்கொள்ள வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள இலக்கம் 1 முதல் இலக்கம் 9 வரை உள்ள பிரிவுகள் முதல் பக்கத்திலும் இலக்கம் 10 ஆம் பிரிவு இரண்டாம் பக்கத்திலும் இலக்கம் 11 முதல் 13 வரை உள்ள பிரிவுகள் மூன்றாம் பக்கத்திலும் இருக்கும் வகையில் விண்ணப்பங்களைத் தயாரித்துக் கொள்ள வேண்டும். மேலும் விண்ணப்பப்படிவத்தின் வலது பக்க மேல் மூலையிலுள்ள பெட்டியினுள் சரியான தகவலைக் கட்டாயமாக நிரப்ப வேண்டும்.

(ஆ) விண்ணப்பத்தை உரிய முறையில் பூரணப்படுத்தி கடித உறையினுள் இட்டு அவ்வுறையின் இடது பக்க மேல் மூலையில் "மாணவ தாதியர் பயிற்சியின் பொருட்டு ஆட்சேர்த்துக்கொள்ளல் - 2015" மற்றும் வசிக்கும் மாவட்டத்தையும் குறிப்பிட்டு 2015.04.24 ஆந் திகதிக்கு முன்னர் "பணிப்பாளர் (நிர்வாகம்) 01, சுகாதார அமைச்சு, 'சுவசிரிபாய', இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு 10" என்னும் முகவரிக்கு பதிவுத்தபால்மூலம் அனுப்ப வேண்டும்.

(இ) இலங்கை நிர்வாக சேவையில்/ கல்வி சேவையில்/ அரசாங் கத்தின் கணக்காளர் சேவையில்/ அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் ஒருவர்/ சமாதான நீதவான்/ சட்டத்தரணி ஒருவர் அல்லது வருடாந்தம் 2,40,360 ரூபாவிற்குக் குறையாத சம்பளம் பெற்றுக் கொள்ளும் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரினால் விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பதாரியின் கையொப்பத்துக்கு மேலால் உள்ள கூட்டினுள் 300 ரூபா பெறுமதியான செல்லுபடியாகும் முத்திரையினை ஒட்டி தமது கையொப்பத்தை இட்டு அதனை செல்லுபடியற்றதாக்குதல் வேண்டும்.

6. பூரணப்படுத்தப்படாத, மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு முரணான, முத்திரை ஒட்டப்படாத மற்றும் 2015.04.24 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பதிவுசெய்யப்படாத விண்ணப்பங்கள் எவ்வித முன்னறிவித்தலும் இன்றி இரத்துச்செய்யப்படுவதுடன், விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்றதாகவும் அறிவிக்கப்பட மாட்டாது.

7. மேல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகளின் Z பெறுமானத்திற்கு அமைய முன்னுரிமை அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர். சுகாதார செயலாளரால் நியமிக்கப்படுகின்ற நேர்முகச் சபையினால் சாதாரண நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு தாதி சேவை பிரமாணக் குறிப்பு மற்றும் இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பரீட்சிக்கப்படுவதுடன் உடற்தகைமைகளும் பரீட்சிக்கப்படும்.

8. நேர்முகப் பரீட்சையின்போது விண்ணப்பதாரிகளால் கீழ்க்குறிப் பிடப்பட்டுள்ள ஆவணங்களின் மூலப்பிரதிகளையும் மற்றும் அவற்றின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளையும் நேர்முகப் பரீட்சை சபையிடம் சமர்ப்பித்தல் வேண்டும். பிறகு சமர்ப்பிக்கப்படுகின்ற எந்தவொரு ஆவணமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது :

(அ) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் ;

(ஆ) க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையின் பெறுபேற்றுச் சான்றிதழ் ;

(இ) க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சையின் பெறுபேற்றுச் சான்றிதழ் ;

(ஈ) தேசிய ஆள் அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு அல்லது சாரதி அனுமதிப்பத்திரம் ;

(உ) மேல் 4 (ஊ) (4) இல் குறிப்பிடப்பட்டுள்ள குடியிருப்பை உறுதிப்படுத்துவதற்கான ஆவணம் ;

(ஊ) விவாகமாகாதவர் என்பதை உறுதிப்படுத்துவதற்காக சமாதான நீதவான் முன்னிலையில் கையொப்பமிடப்பட்ட சத்தியக் கடதாசி.

9. **பயிற்சித் திட்டம்**.- (அ) தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் மாணவ ஆண்/ பெண் தாதிமார்களாக தாதிமார் பயிற்சிப் பாடசாலைக்குச் சேர்க்கப்படுவதுடன், அவர்கள் 3 ஆண்டுகள் பயிற்சிப் பாடத்திட்டம் ஒன்றைப் பயிலுதல் வேண்டும்.

(ஆ) பயிற்சியின் பொருட்டு சேர்த்துக்கொள்ளும் சந்தர்ப்பத்தில் தாதிமார் பயிற்சிப் பாடசாலைகளில் வலுவிலுள்ள சட்டதிட்ட கோவையொன்று பயிலுநர்களுக்கு வழங்கப்படும். இச்சட்டதிட்டங் களுக்கும் காலத்திற்குக்காலம் விதிக்கப்படும் ஏனைய சட்ட திட்டங்களுக்கும் அவர்கள் கட்டுப்படல் வேண்டும்.

(இ) பயிற்சிபெறும் கால எல்லையினுள் குறிப்பிட்ட பரீட்சைகளில் தேர்ச்சியடையாத அல்லது செயற்பாடும் நடத்தையும் திருப்தியற்ற அல்லது பரீட்சை மற்றும் விடுமுறை நிபந்தனைகளைக் கடைப்பிடிக்கத் தவறும் பயிலுநர்களின் பயிற்சி எச்சந்தர்ப்பத்திலேனும் நட்டஈடு எதுவுமின்றி நிறுத்தப்படலாம். பயிற்சிக் காலத்தில் எந்தவிதமான

விடுமுறைகளுக்கும் உரித்தில்லாததோடு இக்காலத்தினுள் வரவின்மைக் காக விசேட கொடுப்பனவிலிருந்து விகித அடிப்படையில் ஒரு தொகை கழிக்கப்படும். அத்தோடு பரீட்சை எழுதுவதற்கு 80% க்கு குறையாத வரவு இருத்தல் வேண்டும்.

(ஈ) தாதிமார் பாடசாலையொன்றில் பயிற்சிபெறும் காலத்தில் பயிலுநர்களுக்குக் கீழே குறிப்பிடப்படும் வகையில் கொடுப்பனவு வழங்கப்படும் :-

(1) முதலாம் வருடம் - மாதத்திற்கு 12,920 ரூபா
(2) இரண்டாம் வருடம் - மாதத்திற்கு 13,040 ரூபா
(3) மூன்றாம் வருடம் - மாதத்திற்கு 13,160 ரூபா

பயிற்சியைத் திருப்திகரமாகப் பூரணப்படுத்திய பின்பு இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்த பயிலுநர்களுக்கு தாதிய உத்தியோகத்தர் III ஆம் தரத்தில் தாதிப் பதவிக்கு குறித்த சம்பள அளவுத்திட்டத்தில் அப்பதவியில் உள்ள வெற்றிடங்களுக்கு அமைய சுகாதார செயலாள ரினால் நியமனங்கள் வழங்கப்படும்.

(உ) பயிற்சிபெறும் காலத்தில் பயிற்சியிலிருந்து விலகினால் அல்லது பயிற்சியைவிட்டுச் சென்றால் பயிற்சிக் காலத்தில் அவருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகளையும் பயிற்சியின் பொருட்டு செலவிடப்பட்ட பணத்தையும் அவர் திணைக்களத்திற்குச் செலுத்தவேண்டும். அவ்வாறு செலுத்தாவிடின் அப்பணத்தை அறவிட்டுக்கொள்வதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

10. **விவாகமாகாத நிபந்தனைகளும் உடன்படிக்கைகளும்**.- (அ) சகல விண்ணப்பதாரிகளும் விண்ணப்பங்களை அனுப்பும் திகதியில் விவாகமாகாதவர்களாக இருக்க வேண்டும் என்பதுடன் பயிற்சி பெற்றுக் கொள்ளும் மூன்றாண்டு காலத்தினுள்ளும் விவாகமாகாதிருத்தல் கட்டாயமாகும். அதனை உறுதிப்படுத்த சமாதான நீதவான் ஒருவர்முன் கையொப்பமிட்ட சத்தியக்கடதாசியினை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டும்.

(ஆ) மாணவ தாதியர், தாதியர் பயிற்சிப் பாடசாலைக்குச் சேர்க்கப்படும் பொழுது திருப்திகரமாகப் பயிற்சியை முடிப்பதென்றும், பயிற்சியைப் பூரணப்படுத்திய பின்பு குறைந்தபட்சம் 10 ஆண்டு காலம் சுகாதார சேவைகள் திணைக்களத்தில் சேவையாற்றுவதென்றும் சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்துடன் பிணை ஒன்றிற்கும் உடன்படிக்கையொன்றிற்கு உட்படுதல் வேண்டும். சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்தினால் இக்கால எல்லை காலத்திற்குகாலம் தீர்மானிக்கப்படும்.

11. **சேவையில் ஈடுபடும் நியதிகள்**.- (அ) பயிற்சியின் பின்னர் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு அரசு பொறுப்பு ஏற்காது. என்றாலும் பயிலுநர்கள் பயிற்சிப் பாடநெறிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான ஏற்பாடுகள் மற்றும் நிலவுகின்ற வெற்றிடங்கள் என்பவற்றுக்கு ஏற்ப தாதிப் பதவியின் தரம் III இன் தாதி உத்தியோகத்தர் பதவிக்கு நியமிப்பது தொடர்பாக கருத்திற்கொள்ளப்படும்.

(ஆ) மேற்படி பயிற்சியின் பின்பு நடாத்தப்படும் இறுதிப் பரீட்சையின் பெறுபேறுகளின் பின் தரம் III தாதிய உத்தியோகத்தர் பதவிக்கு நியமிக்கப்படும் இப்பதவியானது ஓய்வூதியத்துடன் கூடியதானதும் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு பங்களிப்புத் தொகை செலுத்த வேண்டும்.

(இ) III ஆம் தரத்தின் பிரிவின் பதவிநிலை தாதிமார் பதவிகளுக்கு மூன்று ஆண்டுகள் தகுதிகாண் நிலைக்காலத்திற்கு உட்படுத்தப்பட்டு நியமிக்கப்படுவர்.

12. **சேவை நிபந்தனைகள்**.- (அ) சகல பயிலுநர்களும் பயிற்சி ஆரம்பிக்க முன்பு மருத்துவ சோதனை செய்துகொள்ள வேண்டும்.

(ஆ) பொது நிர்வாக சுற்றறிக்கை 6/2006 (iv) இன்படி ரூபா 15,620-4 ×180 - 6 × 240 - 11 × 320 - 20 × 360 - ரூபா 28,500 சம்பள அளவுத்திட்டத்தின்படி எம்ரி 7-2006 ''ஏ'' இற்கமைவாக தாதி உத்தியோகத்தர்கள் III ஆம் தரத்தில் பதவிகளுக்கு நிலவும் வெற்றிடங்களின்படி நியமிக்கப்படுவர்.

(இ) தாதிமார் சேவையின் சகல உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கும், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அரச சேவைகள் தொடர்பாக விதிக்கப்படும் சட்டங்கள், நியதிகள் மற்றும் விதப்புரைகளுக்கும் தாதியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கும் அரச நிதிப் பிரமாணத்துக்கும், ஏனைய அரச சுற்றுநிருபங்கள், விதப்புரைகள் மற்றும் அவற்றில் ஏற்படக்கூடிய மாற்றங்களுக்கும் அமைவாக செயற்படுதல் வேண்டும்.

(ஈ) கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் தொடர்பிலான தகவல்கள் கவனமாகவும் சரியாகவும் விண்ணப்பப்படிவத்தில் நிரப்பப்படல் வேண்டும். பயிற்சிக்காக சேர்க்கப்பட்ட பின்னரோ நியமனம் பெற்ற பின்னரோ மேற்படி ஆவணங்கள் பொய்யானவை என நிரூபனமானால் சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்காக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு ஒப்படைப்பதற்கும், வழங்கப்பட்ட நியமனத்தை இரத்துச்செய்து, பயிற்சியிலிருந்து/பதவியிலிருந்து நீக்குவதற்கும், மீண்டும் அரச சேவையில் சேர்க்கப்படாதோர் பட்டியலில் அவரது பெயரை உள்ளடக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் பயிற்சிக்காலத்தில் அவருக்கு கொடுக்கப்பட்ட கொடுப்பனவுகள், அரசு மேற்கொண்ட செலவுகள் மற்றும் பிணைத்தொகை என்பன அவரிடம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(உ) பயிற்சிக்காக சேர்த்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பதாரிகளுக்காக பயிற்சிப் பாடசாலைகளில் விடுதி வசதிகள் வழங்குவதற்கு இவ்வமைச்சு பொறுப்பு ஏற்க மாட்டாது.

(ஊ) இப்பயிற்சிக் காலப்பகுதியினுள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அல்லது தனியார் சேவைகளில் ஈடுபடுவதற்கு எவ்வித உரித்தும் கிடையாது. அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகத் தெரியவரின் பயிற்சியிலிருந்து அகற்றவோ வேறு பொருத்தமான நடவடிக்கையினை எடுக்கவோ முடியும்.

(எ) இந்த வர்த்தமானியில் குறிப்பிடப்படாத பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு சம்பந்தமாக எழும் எந்தவொரு விடயத்திற்கும் சுகாதார அமைச்சின் செயலாளரின் முடிவே இறுதியானதாகும். இவ்வர்த்தமானியின் அறிவித்தலானது சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிப் பிரதிகளுக்கிடையில் ஒவ்வாத்தன்மை காணப்படின், சிங்கள மொழியிலான பிரதியே செல்லுபடியானதாகும்.

கலாநிதி டி. எம். ஆர். வி. திசாநாயக்க,
செயலாளர்,
சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சு.

சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சு,
"சுவசிரிபாய",
இல. 385, வண. பத்தேகம விமலசங்க தேரர் மாவத்தை,
கொழும்பு 10,
2015, மாச்சு 20.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சு**

*மாணவ தாதியர் பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு - 2015*

| | |
|---|---|
| மாவட்டம் | |
| உயர்தர பாடத்துறை | |
| உயர் தரம் சித்தியடைந்த வருடம் | |
| மொழி மூலம் | |

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக் களில்) :----.

   (ஆ) முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

   (இ) முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2. தபால் முகவரி (ஆங்கிலத்தில்) :----.

3. (i) நிரந்தர முகவரி :

| |
|---|
| |

   (ii) மாவட்டம் (ஆங்கிலத்தில்) :

| |
|---|
| |

   (iii) தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கையடக்க | | | | | | | | | | |
| வதிவிட | | | | | | | | | | |

4. பிறந்த திகதி :-

   ஆண்டு :---- மாதம் :---- திகதி :----.

5. 2015.04.24 ஆந் திகதியன்று வயது :-

   வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

6. பால் (ஆண்/பெண்) :

| | |
|---|---|
| ஆண் | |
| பெண் | |

(உரிய கூட்டில் "✓" அடையாளம் இடுக)

7. நீங்கள் இலங்கைப் பிரசையா?

| | |
|---|---|
| ஆம் | |
| இல்லை | |

(உரிய கூட்டில் "✓" அடையாளம் இடுக.)

8. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :-

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

9. உயரம் :- அடி :-----, அங்குலம் :-----. /சென்ரி மீற்றரில் : -----.

10. (அ) கல்விப் பொதுத் தராதர (உயர் தரப்) பரீட்சை (விஞ்ஞான பிரிவு பாடங்கள்)

   வருடம் :-----. சுட்டெண் :-----.

   வெட்டுப்புள்ளி :-----, பாடநெறி :-----.

| பாடங்கள் | தரம் | அலுவலக உபயோகத்திற்கு |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

   (ஆ) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரம்) பரீட்சை :

   முதலாம் அமர்வு :

   (i) பரீட்சை வருடமும் மாதமும் :----.
   (ii) சுட்டிலக்கம் :----.

| பாடங்கள் | தரம் | அலுவலக உபயோகத்திற்கு |
|---|---|---|
| 1. கணிதம் | | |
| 2. விஞ்ஞானம் | | |
| 3. தமிழ் | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |
| 7. | | |
| 8. | | |
| 9. | | |
| 10. | | |

   இரண்டாம் அமர்வு :

   (i) பரீட்சை வருடமும் மாதமும் :----.
   (ii) சுட்டிலக்கம் :----.

| பாடங்கள் | தரம் | அலுவலக உபயோகத்திற்கு |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |
| 7. | | |
| 8. | | |
| 9. | | |
| 10. | | |

11. ஏதாவது குற்றச்செயலுக்காக நீதிமன்ற தண்டனை அனுபவித்துள்ளீரா? :-

| | |
|---|---|
| ஆம் | |
| இல்லை | |

(உரிய கூட்டில் "✓" அடையாளம் இடுக)

ஆம் எனில், தயவுசெய்து காரணத்தைக் குறிப்பிடுக :......................

12. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

(அ) இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்ட விபரங்கள் அனைத்தும் எனது அறிவுக்கு எட்டியவரையில் உண்மையானதும் சரியானதுமாகும்.

(ஆ) என்னால் கொடுக்கப்பட்ட உறுதியுரை பிழையென பின்னர் தெரியவரின் நான் சேவையிலிருந்து விலக்கப்படுவேன் என நன்கு அறிவேன்.

| |
|---|
| ரூபா 300 பெறுமதியான முத்திரை ஒட்டி அதன்மேல் கையொப்பம் இடுவதன் மூலம் இரத்துச்செய்யவும். |

------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

13. **உறுதிப்படுத்தல் :**

விண்ணப்பதாரி ................................. எனக்கு தனிப்பட்ட முறையில் பரீட்சயமானவர் என்றும் அவரது கையொப்பத்தை எனது முன்னிலையில் ................................. 2015 ஆந் திகதி இடப்பட்டது என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் முழுப் பெயர் :-----.

பதவி :-----.

முகவரி :-----.

திகதி :-----.

4-209

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**எல்லா வர்த்தமானிகளையும் www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.***– *இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

***அட்டவணை - 2015***

| *மாதம்* | | *வெளியீட்டு நாள்* | | | *அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும்* | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஏப்பிறல்** | .. | வியாழன் | 02.04.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.03.2015 |
| | | வெள்ளி | 10.04.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.03.2015 |
| | | வெள்ளி | 17.04.2015 | .. | நண்பகல் 12 | வியாழன் | 02.04.2015 |
| | | வெள்ளி | 24.04.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.04.2015 |
| | | வியாழன் | 30.04.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.04.2015 |
| **மே** | .. | வெள்ளி | 08.05.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.04.2015 |
| | | வெள்ளி | 15.05.2015 | .. | நண்பகல் 12 | வியாழன் | 30.04.2015 |
| | | வெள்ளி | 22.05.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.05.2015 |
| | | வெள்ளி | 29.05.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.05.2015 |
| **யூன்** | .. | வெள்ளி | 05.06.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.05.2015 |
| | | வெள்ளி | 12.06.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.05.2015 |
| | | வெள்ளி | 19.06.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.06.2015 |
| | | வெள்ளி | 26.06.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.06.2015 |

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*